# இளைஞர் அணி - சமூக வலைதள கழக மாவட்ட துணை அமைப்பாளர்கள் நேர்காணல்! தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்!









சென்னை, ஜூன் 14-

தி.மு.கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைத்தளப் பயிற்சியளிக்கவும், சமூக வலைதளம் சார்ந்த அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப்பொறுப்புக்குத் தமிழ்நாடு முழுவதும் இருந்து 1400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இந்த நிலையில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விண்ணப்பித்தவர்கள் இதுவரை ஆற்றிய பணிகள் கொண்டுவந்திருந்த மினிட் புத்தகங்கள் மற்றும் அவர்களின் சமூக வலைதள பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாநில துணைச் செயலாளர் முன்னிலையில் திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை நேற்று முன்தினம் நேர்காணல் செய்தார்.

### அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில்

## அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

ஒட்டன்சத்திரம், ஜூன் 14-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதி தங்கச்சியம் மாபட்டி ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க. திண்டுக்கல் மேற்கு மாவட்ட மாண வர் அணி துணைச் செயலா ளர் முத்துவேல் தலைமை யில் அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் சுமார் 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்து கொண்டனர்.

நிகழ்வில் தி.மு.க. மேற்கு மாவட்ட துணைச் செயலா ளர் ராஜாமணி, மத்திய ஒன் றியச் செயலாளர் எஸ்.ஆர். கே.பாலு, துணைச் செயலா ளர்கள் முருகானந்தம், சிவ பாக்கியம் ராமசாமி உள் ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி வடக்கு, திண்டுக்கல் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.30 மணி | தூத்துக்குடி வடக்கு | கலைஞர் அரங்கம், எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி. |
| | மாலை 4.00 மணி | திண்டுக்கல் மேற்கு | அபூர்வா ஹால், ஒட்டன்சத்திரம். |
| | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், ஸ்ரீ வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூரு பிரதான சாலை, கிருஷ்ணகிரி. |
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஒசூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 13-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### 'தஞ்சாவூர் - கும்பகோணம் - விழுப்புரம் வழியில் இரட்டைத்தடம் அமைக்கும் திட்டம்!

## ஒன்றிய இரயில்வே அமைச்சரவை ஒப்புதல்!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. கோரிக்கைக்கு பதில்!



புதுக்கோட்டை, ஜூன் 14-

தஞ்சாவூர், கும்ப கோ ணம், விழுப்புரம் ஆகிய வற்றை இணைக்கும் 193 கி.மீ. நீளமான இரயில்வே பாதையில் இரட்டைத்த டம் அமைக்கும் பணியை உடனடியாக செயல்படுத்த வேண்டும் எனக்கோரி நாடாளுமன்ற உறுப்பின ரான எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் பல் வேறு முறை பேசி வந்தார்.

மேலும் இது குறித்து தொடர்ச்சியாக இந்திய ஒன்றிய இரயல்வே அமைச் சர் அவர்களுக்கு கடிதங்கள் எழுதியும் வந்தார். இதன் தொடர்ச்சியாக கடந்த 27.11.2024 அன்று இர யில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் அவர்களையும் நேரில் சந்தித்து கடிதம் மூலம் கோரிக்கை வைத் தார்.

இது குறித்து தற்போது பதிலளித்துள்ள ஒன்றிய இர யில்வே அமைச்சகம்

"விழுப்புரம் - கும்பகோ ணம் - தஞ்சாவூர் (193 கி.மீ.) பாதையில் இரட்டைத்த டம் அமைக்கும் பணிக்கான கள ஆய்வு நிறைவடைந் துள்ளது" எனவும், "ஆய்வு அறிக்கையைத் தயார் செய் யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது," எனவும் தெரிவித்துள்ளது.

இந்த இரட்டை இர யில்வே தடத்திற்கான திட் டம் 1877 ஆம் ஆண்டி லேயே உருவாக்கப்பட்டது. தற்போது வரை ஒற்றைத்த டம் மட்டுமே உள்ளதால், வழித்தட நெரிசல், இரயில் கள் தாமதம், புதிய நீண்ட தூர இரயில்களுக்கு இட மில்லாமை போன்ற பல பிரச்சினைகள் நிலவு கின் றன. 2019இல் ஆய்வு ஒப்பு தல் கிடைத்தும், 5 ஆண்டுக ளாக முன்னேற்றம் ஏதும் இல்லை. இந்நிலையில் தற் போது வந்துள்ள இந்த அறி விப்பின் மூலம் இந்த வழித் தடத்தில் இரண்டு ரயில்கள் ஒரே நேரத்தில் எதிர் திசை களில் இயக்கப்பட வசதி யாகும். இதனால் பயணிகள் நலன் உயர்ந்து, பொருளா தார வளர்ச்சிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும்.

நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.எம்.அப்துல்லா எம். பி. மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தும் கட் டத்துக்கு வந்துள்ளது.



தூத்துக்குடி சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மகளிருக்கு தையல் இயந்திரம், கிரைண்டர், மிதிவண்டி, இஸ்திரி பெட்டி, இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பெ.கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மதியழகன், அன்பழகன், ராஜ் மோகன் செல்வின், பால குருசாமி, அன்னலட்சுமி கோட்டூர் ராஜ், அதிஷ்டமணி, ரவீந்திரன், துறைமுகம் புளோரன்ஸ், சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.